அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல.38/89(1)

அரசாங்க நிருவாக,மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்--கொழும்பு.7
1990,மார்ச்சு 22 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் தேர்ச்சி பெற்ற
அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான ஊக்குகைக்
கொடுப்பனவுகள்,வேதன ஏற்றங்கள்,பதவியுயர்வுகள்.

89.07.31ஆந் திகதியிட்ட 38/89ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையினைத் தொடர்ந்து வருவது.

02. மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக சில திணைக்களங்கள்/அமைச்சுகள் சில கொடுப்பனவுகளைச் செய்துள்ளமை எனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. சுற்றறிக்கை அறிவுறுத்துரைகளின் நியதிகளின்படி இந் நிலைமைகளைத் திருத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். ஊக்குகைக் கொடுப்பனவுகளுக்கான தகுதியை நிர்ணயிப்பதற்கு அதிகாரிகளுக்கு உதவுவதற்காக பின்வரும் விளக்கங்கள் தரப்படுகின்றன:-

(1) மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 3:1(அ),(ஆ),3:11(அ) ஆம் பிரிவுகளின் நியதிகளின்படி 02(அ)ஆம் பிரிவில் விதித்துரைக்கப்பட்ட எழுத்து மூலப் பரீட்சைகள்,வாய்மொழிப் பரீட்சைகள் ஆகிய இரண்டு பரீட்சைகளையும் பூர்த்தி செய்த பின்னரே கொடுப்பனவு எதுவும் செய்யப்படலாம். இப்பரீட்சைகள் ஒவ்வொரு ஆண்டிலும் திசெம்பர் மாதத்தில் பரீட்சை ஆணையாளரினால் நடத்தப்படும். க.பொ.த(சா/த) பரீட்சையில் ஒரு பாடமாக மொழியொன்றில் சித்தியடைவது இச் சுற்றறிக்கையின் 02(அ)ஆம் பிரிவில் குறிப்பிட்ட பத்தாம் தரத்தில் எழுத்து மூலப் பரீட்சையில் மட்டும் சித்தியெய்தியுள்ளதாகக் கணிக்கப்படும். எனவே,ஊக்குகைக் கொடுப்பனவு,உத்தியோகத்தர் எழுத்து மூலப் பரீட்சையில் திறமைச் சித்தி அல்லது விசேட சித்தியைப் பெற்றிருந்த போதிலும் எழுத்து மூலப் பரீட்சை,வாய்மொழிப் பரீட்சை ஆகிய இரண்டு பரீட்சைகளையும் பூர்த்தி செய்த பின்னர் மட்டுமே அவர்க்கு வழங்கப்படல் வேண்டும். இக்கொடுப்பனவுகள் இப்பரீட்சைகளைப் பூர்த்தி செய்த திகதியிலிருந்து வழங்கப்படும். க.பொ.த(சா/த) பரீட்சையில் ஆங்கில மொழிப் பாடத்தின் 'அ','ஆ' பாடத்திட்டம் இச்சுற்றறிக்கையின் நோக்கங்களுக்கு சமமானதாக கருதப்படும்.

..6

(11) மேலே குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 03 : 1.1(ஆ), (இ) பிரிவில் குறிப்பிட்ட க.பொ.த(சா/த) சான்றிதழை விட உயர்ந்த சான்றிதழ்களுக்கான ஊக்குவிக்கைக் கொடுப்பனவுகள், இச்சுற்றறிக்கைத் திகதியிலிருந்து அல்லது அப்பரீட்சையில் சித்தியடைந்த திகதியிலிருந்து, இதில் எது பிந்தியதோ அத்திகதியிலிருந்து, வழங்கப்படலாம். எனினும் ஊக்குவிக்கைக் கொடுப்பனவுகள், ஊக்குவிக்கைக் கொடுப்பனவுகளுக்காக விதித்துரைக்கப்பட்ட மொழியில் அம்மொழியை ஒரு பாடமாக எடுத்து சித்தியடைந்தவர்களுக்கு மட்டுமே கொடுக்கப்படல் வேண்டும். உத்தியோகத்தர் ஒருவர் தாம் அரசாங்க சேவையில் சேர்ந்த மொழி மூலம் தவிர்ந்த பிறமொழி மூலத்தில் ஒரு பரீட்சையில் விடையெழுதியிருப்பினும் பரீட்சை ஒன்றில் விதிக்கப்பட்ட மொழியைப் பாடமாகக் கொண்டு சித்தியெய்தலின்றி பிறபாடத்திற் சித்தியெய்தியதன் பொருட்டு அவர்க்கு ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படமாட்டாது.

(111) மேலே குறிப்பிட்ட சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்படாத சான்றிதழ்களுக்கு கொடுப்பனவு எதுவும் வழங்கப்படமாட்டாது.

(11/) இரண்டாம் மொழித் தேவைப்பாட்டிலிருந்து அல்லது மொழித் தேர்ச்சித் தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிப்பைப் பெறுவதற்கு சான்றிதழ் உபயோகிக்கப்பட்ட மட்டம் வரைக்கும் உத்தியோகத்தரொருவருக்கு ஊக்குவிக்கைக் கொடுப்பனவுகள் வழங்கப்படமாட்டா. உதாரணமாக உத்தியோகத்தரொருவர் க.பொ.த(சா/த) ஆங்கிலமொழிச் சான்றிதழ் ஒன்றை அத்தகைய விலக்களிப்பைப் பெறுவதற்காகச் சமர்ப்பித்திருந்தால் அவர் திறமைச் சித்தியை அல்லது விசேட சித்தியைப் பெற்றிருப்பினும் அவ ஊக்குவிக்கைக் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு உரித்துடையவரல்லர்.

(1/) 379ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையின் நியதிகளின்படி 500/- ரூபா கொடுப்பனவைப் பெற்ற உத்தியோகத்தரொருவர் க.பொ.த. (சா/த) மட்டம் வரை சிங்கள மொழி மூலத்தில் வேலை செய்வதற்கு பணிக்கப்பட்டுள்ளமை காரணமாக அவர் அம்மட்டம் வரை ஊக்குவிக்கைக் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு உரித்துடையவரல்லர்.

(1/1) இக்கொடுப்பனவுகள் யாவும் மேலே குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 6ஆம் பிரிவிற்கு உட்பட்டு செய்யப்படல் வேண்டும்.

..6

( V11 ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் தவிர்ந்த பிற எந்த மொழிக்கும் ஊக்கு கைக் கொடுப்பனவுகள் வழங்கப்படமாட்டா.

(VIII ) தற்போதைய சேவையின் சேர்வு மொழி மூலத்தை நிர்ணயிப்பதில் அதிகாரிகள், ஆட்சேர்ப்புக்கு பரீட்சை நடத்தப்பட்டிருந்தால் உத்தியோகத்தர் பரீட்சைக்கு தோற்றிய மொழி மூலகத்தைக் கவனத்திற் கொள்ளல் வேண்டும்; ஆட்சேர்ப்புக்கு பரீட்சையொன்று நடத்தப்படாமலிருந்தால் அவர் அடிப்படைக் கல்வியை எந்தமொழி மூலத்தில் கற்றாரோ அந்த மொழி மூலம் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்; இ பிற சகல விடயங்களிலும் அவருக்கு எம்மொழி மூலத்தில் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டதோ அம்மொழி மூலம் கவனத்திற் கொள்ளப் பட வேண்டும்.

( IX ) மேலே குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 6ஆம் பிரிவிற்கு உட்பட்டு ஊக்கு கைக் கொடுப்பனவுகள் உச்சமாக இரண்டு விதித்துரைத்த மொழிகளுக்கு தனித்தனியாக வழங்கப்படலாம்.

இத்திட்டத்தின் நியதிகளின்படி உத்தியோகத்தர்களுக்கு விசேட ஓய்வூதியம் சாரா வேதன ஏற்றங்கள் வழங்கப்படும் போது அவர்கள் வேதன அளவுத் திட்டத்தின் அடுத்த உயர் படிநிலையில் வைக்கப்படாமல் அவர்களுக்கு அடுத்த வேதன ஏற்றத்திற்குச் சமமான படியொன்று வழங்கப்படல் வேண்டும். உத்தியோகத்தரொருவர் வேதன அளவுத்திட்டத்தின் உச்சநிலையை அடைந்திருக்குமிடத்து அவருக்கு வழங்கப்பட்ட இறுதி வேதன ஏற்றத்திற்குச் சமமானவொரு படி வழங்கப்படலாம்.

ஒப்பம்: பீ.என்.எம். பெர்னாந்து.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.